தஞ்சாவூர் அன்னை சத்யா விளையாட்டு அரங்கத்தில் மேம்படுத்தப்பட்ட நவீன உடற்பயிற்சி மையத்தை உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திறந்து வைத்து பார்வையிட்டார்கள். மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, ச.முரசொலி எம்.பி, டி.ஆர்.ஓ தெ.தியாகராஜன், டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, மாநகராட்சி மேயர் சண் இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, மாவட்ட விளையாட்டு நல அலுவலர் ஜெ.டேவிட் டேனியல் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும்!

நாமக்கல்லில் சித்த மருத்துவக் கல்லூரி விரைவில் பயன்பாட்டிற்கு வரும்!

சட்டப்பேரவையில் உறுப்பினர்களின் கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில்!

சென்னை, அக்.18- முதலமைச்சர் அவர்களால் கோவில்பட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோவில்பட்டி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.13.10 கோடி மதிப்பீட்டில் மருத்துவக் கட்டமைப்புகள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்றும், முதலமைச்சர் அவர்களால் விரைவில் நாமக்கல் மாவட்டத்தில் சித்த மருத்துவக்கல்லூரி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் 15.10.2025 அன்று சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பதிலளித்தார்.

இது குறித்த விவரம் வருமாறு:-

கோவில்பட்டி சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு

தூத்துக்குடிமாவட்டம், கோவில்பட்டி தொகுதியில் உள்ள வானரமுட்டி கிராமம், கயத்தார் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. வானரமுட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இது முப்பது படுக்கை வசதிகள் கொண்ட கழுகுமலை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.

இந்த ஊராட்சியின் மக்கள் தொகை என்பது 5871 மட்டுமே. அவருக்கு நன்றாக தெரியும் ஆரம்ப சுகாதார நிலையம் புதிதாக அமைய வேண்டுமானால் 30,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். ஏற்கெனவே அந்த ஊராட்சியைப் பொறுத்தவரை 4 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றது.

உறுப்பினர் அவர்கள் அவர் சார்ந்து இருக்கின்ற தொகுதியில் மட்டுமே இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு கு தமிழ்நாடு முதலமைச்சர்அவர்களின் வழிகாட்டுதலின்படி, எந்தக் கட்சி சார்ந்த உறுப்பினர் என்றெல்லாம் பாகுபாடு பார்க்காமல் இந்த துறையில் மட்டுமே இது வரை நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்தியிருக்கும் பட்டியலை போட்டால் நீண்ட நேரமாகும்.

அதிலும் குறிப்பாக அவருடைய தொகுதியில் ஊருணி தெருவில், ஸ்ரீராம் நகர் பகுதியில் இரண்டு நகர்புற நலவாழ்வு மையங்கள், இலுப்பையூரணி, அத்திகுளம், விஜயாபுரி, கழுகாசலபுரம், செட்டிகுறிச்சி, காமநாயக்கன் பட்டி, சிவஞானபுரம் ஆகிய 8 துணை சுகாதார நிலைய கட்டிடங்கள், கீழ் ஏரல் மற்றும் கடம்பூர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடங்கள், அதேபோல கழுகுமலை, கடம்பூர் மற்றும் கயத்தாறு ஆகிய 3ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆயுஷ் நலவாழ்வு மையங்கள், கழுகுமலை மற்றும் கீழ்ஏரல் ஆகிய பகுதிகளில் 2 ECG கருவிகள், அது மட்டுமல்ல முதலமைச்சர் அவர்களே நேரிடையாக வருகை புரிந்து கோவில்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில், RTPCR ஆய்வகம் மற்றும்மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவ கட்டிடம், கண் அறுவை சிகிச்சை பிரிவு, கட்டண படுக்கை அறைகள், மாவட்ட ஒருங்கிணைந்த சுகாதார ஆய்வக கட்டிடம் என்று ரூ.13.10 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு எல்லாம்பயன்பாட்டில் வந்துள்ளன என்று தெரிவித்து, ஏற்கெனவே நான் அடிக்கடி சொல்வதைபோல ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களிடம் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அனுமதி கேட்டிருக்கிறோம், அனுமதி கிடைத்தவுடன் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

செவிலியர் பயிற்சி கல்லூரிகள், செவிலியர் பயிற்சி பள்ளிகள் புதிதாக தொடங்குவதற்கு ஏற்கெனவே ஒன்றிய அரசிடம் அனுமதி கேட்டு கடிதம் வழங்கப்பட்டிருக்கிறது. அனுமதி கிடைக்கும் பட்சத்தில் நிச்சயமாக அவர்கேட்கும் இடத்தில் செவிலியர் பயிற்சி பள்ளியோ அல்லது செவிலியர் கல்லூரியோ அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு

நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவமனை என்பது ஏற்கெனவே அமையப் பெற்றுள்ளது. அவர் சொன்னது போல வட்டார அரசு மருத்துவமனை என்பது ஒரு சித்த மருத்துவக்கல்லூரி அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, பணியாளர்கள் நியமனம் கூட தற்போது நடைபெற்று வருகிறது. மிக விரைவில் ட முதலமைச்சர் அவர்கள் காணொளி வாயிலாக நாமக்கல் மாவட்டத்தில் ஒரு சித்த மருத்துவக் கல்லூரியை விரைவில் திறந்து வைக்க உள்ளார்கள். அந்த கட்டிடம் என்பது மருத்துவத்துறையின் செயல்பாட்டிற்கு வரவேற்கப்பட உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு

மிக நீண்ட காலத்திற்கு பிறகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, கடந்த ஜீலை திங்கள் 03 ஆம் தேதி ஊரக மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் 50 கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. மீண்டும் ஒன்றிய அரசின் அலுவலர்களுடன் தமிழ்நாட்டிற்கு புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் வேண்டும் என்று கேட்கும்போது அவர்கள் சொல்வது தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 8,713 துணை சுகாதார நிலையங்கள், 2286 ஆரம்ப சுகாதார நிலையங்களும் என ஆக மொத்தம் 11,049 சுகாதார மருத்துவக் கட்டமைப்புகள் இருக்கின்றது.

வடமாநிலங்களில் இதில் பாதி கூட இல்லை. எனவே உங்களுக்கு காலம் தாழ்த்தி தருகிறோம் என்றெல்லாம் பதில் சொல்கிறார்கள், என்றாலும் முதலமைச்சர் அவர்களின் தேவைகள் குறித்த கடிதத்தை ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி கொடுத்திருக்கிறோம். வரும்போது நிச்சயம்விதிமுறைகளின்படி அமைய வேண்டுமோ அங்கேயெல்லாம் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

கந்தவர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு

நான் ஏற்கெனவே சொன்னதுபோல 11,049 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் தமிழ் நாட்டில் மிகச் சிறப்பான பயன்பாட்டில் இருந்துக் கொண்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் இது மட்டும் போதாது என்று சொல்லி ஏற்கெனவே 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் நிறுவி திறந்து வைத்திருக்கிறார்கள். இப்படி புதிய புதிய மருத்துவக் கட்டமைப்புகள் தொடர்ச்சியாக தொடங்கி கொண்டிருக்கும் சூழ்நிலையில் ஒன்றிய அரசின் அனுமதி கிடைத்தவுடன் எங்கெயெல்லாம்தேவைப்படுமோ அங்கெயெல்லாம் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு

திருமுட்டம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் பொறுத்த வரை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக ஏற்கெனவே சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அரசு மருத்துவமனை என்று வரும்போது ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிறைய வசதிகள் பறிபோகும் என்பதை மன்ற உறுப்பினர் அவர்களும் அறிவார். 2 வசதிகள் கூடுமானால் 8 வசதிகள் பறிபோகும் என்கின்ற வகையில் விதிமுறைகள் இருக்கின்றது. இப்போது இருக்கின்ற 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையே மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்கள் கேள்விக்கு

இந்த அரசு அமையப் பெற்றதற்கு பிறகு முதலமைச்சர் அவர்கள் பொது சுகாதாரத்துறைக்கு மட்டும் ரூ.1,274.25 கோடி மதிப்பீட்டில் 1,500 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கூடுதல் கட்டிடம், துணை சுகாதார நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டி தொடர்ச்சியாக திறந்து வைக்கப்பட்டு வருகிறது.

மன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பது போல 600-க்கும் மேற்பட்ட துணை சுகாதார நிலையங்கள் மிக விரைவில் திறந்து வைக்கப்பட உள்ளது. அதில் ஒன்றை அவர் கேட்கும் இடத்தில் தருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நியாய விலைக்கடையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கூட்டுறவுத்துறையின் சார்பில் இராசிபுரம் வட்டத்தைச் சேர்ந்த 22,264 பயனாளிகளுக்கு இலவச வேட்டி, சேலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இராசிபுரம் நகர் மன்றத் தலைவர் கவிதா சங்கர், கூட்டுறவு சங்கங்களின் இணைபதிவாளர் க.பா.அருளரசு மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

திருவாரூர் தொகுதிக்குட்பட்ட, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம்,கீழமணலி ஊராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.6.00 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நிறைவுவிழா பயணியர் நிழலகத்தினை மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.திறந்து வைத்தார் நிகழ்வில் மன்னார்குடி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஐ.வி.குமரேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் பா.அரவிந்த்,தொகுதி பொறுப்பாளர் வினோத் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

சிறைகள் பராமரிப்பு நிதிக்காக

ரூ.10 கோடி உயர்த்தி வழங்கப்பட்டிருக்கிறது!

பேரவையில் - அமைச்சர் எஸ்.ரகுபதி தகவல்!

சென்னை, அக். 18- சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது உறுப்பினர் இரா.அருள் கேள்விக்கு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலளிக்கையில் 2025 -26 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் சிறை பராமரிப்புக்காக ரூபாய் 10 கோடி உயர்த்தி வழங்கப்பட்டு இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

இதுகுறித்து விவாதம் வருமாறு:-

இரா.அருள்: சேலம் மத்திய சிறை வளாகத்தில் உள்ள பழுதடைந்த குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் எஸ்.ரகுபதி: சேலம் மத்திய சிறை வளாகத்தில் உள்ள மொத்தம் 223 குடியிருப்புகளில் 89 குடியிருப்புகள் மட்டும் 1980 ஆம் ஆண்டுக்கு முன்னர் கட்டப்பட்டதாகும். மீதமுள்ள134குடியிருப்புகளும் 2001 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையில் கட்டப்பட்டதாகும். அனைத்து மத்திய சிறைச்சாலைகளில் உள்ள குடி யிருப்புகளின் பராமரிப்புப் பணிகள் சிறை கண்காணிப்பாளர்களால் அளிக்கப்படும் முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில், ஆண்டு பராமரிப்பு நிதியிலிருந்து தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தினர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்தமூன்றாண்டுகளில் சேலம் மத்திய சிறை வளாகத்தில் உள்ள குடியிருப்புகளின் அடிப்படை வசதிகள் தொடர்பான பராமரிப்புப் பணிகள் 18 இலட்சத்து 42 ஆயிரத்து 877 ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும், 6 புதிய குடியிருப்புகள் உதவி சிறை அலு வலர்களுக்கு 1 கோடியே 6 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. பழைய குடியிருப்புகளுக்குப் பதிலாக - எனவே, சேலம் மத்திய சிறை வளாகத்தில் உள்ள பழைய குடியிருப்புகளை அகற்றிவிட்டு, புதிய குடியிருப்புகள் கட்டப்பட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

இரா. அருள்: சேலம் மத்திய சிறை வளாகத்தில் 89 குடியிருப்புகள் 1980 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாக அமைச்சர் அவர்கள் பதிலில் சொன்னார்கள். கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் நிறைவடையப் போகிறது. அந்த 89 குடியிருப்புகளும் காலியாகவே இருக்கின்றன. கதவுகள் இல்லாமல் திறந்து கிடக்கிறது. அங்கு எந்தக் காவலர்களும் குடியிருக்கவில்லை. அதுமட்டுமல்லாமல், மத்திய சிறை வளாகம் என்பது மிகப் பெரிய வளாகமாகும். பராமரிப்புப் பணிகளுக்காக மூன்றாண்டுகளுக்கு ரூ.18 இலட்சம் ஒதுக்கப்படுவது என்பது மிகக் குறைந்த தொகையாகும். ஆகவே, இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும். இன்னொன்று, SUPERINTENDENT, JAILER ஆகியோருடைய வீடுகளை பார்த்தீர்களென்றால், பழைய கையோடு போட்ட வீடுகளாகும். அதுவும் மிகவும் பயன்படுத்த முடியாத அளவுக்கு பாழடைந்து கிடக்கிறது. அதுமட்டுமல்லாமல், சிறை வளாகத்தில் பழமையான முனியப்பன் கோயில் ஒன்று இருக்கிறது. அந்தக் கோயில் அந்தப் பகுதி மக்கள் எல்லோருக்கும் காவல் தெய்வமாக இருக்கிறது. சுதந்திரம் அடைவதற்கு முன்பு, ஆயிரம் வருடங்களாக இருக்கிற கோயிலாகும். அந்தக் கோயிலுக்கு அனைத்து மக்களும் எல்லா நேரங்களிலும் சென்று சாமி தரிசனம் செய்யத்தக்க வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் எஸ். ரகுபதி: சிறை வளாகத்திற்குள் அனைத்து நேரங்களிலும் அனைவரையும் அனுமதிப்பது என்பது இயலாத காரியம் ஆகும். எனவே, அனுமதி பெற்று யார் வேண்டுமானாலும் கோயிலுக்குச் சென்று சாமி தரிசனம் செய்யலாம். அதிலே எந்தவித தடையும் கிடையாது.

அதேபோல, சேலம் மத்திய சிறைச்சாலையைப் பொறுத்தவரை, 89 குடியிருப்புகளுக்குமேல் இன்றைக்கு பயன்பாடு இல்லாமல் இருக்கிறது என்று நீங்கள் சொன்னீர்கள். அங்கே கள பணியாளர்கள் 247 பேர், அமைச்சு பணியாளர்கள் 22 பேர், இதர பணியாளர்கள் 32 பேர் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்குப் போதுமான வீட்டு வசதி வெளியேயும் ஏற்படுத்தி தரப்பட்டு, வாடகைக்கும் குடியிருந்து வருகிறார்கள். ஆக, 50 குடியிருப்புகளில் மட்டும் இன்றைக்கு யாரும் இல்லை. அந்த வீடுகளை இடித்து விட்டு கட்டுவதற்குப் போதுமான நிதி வருகிற போது கட்டித் தரப்படும். தற்போது அங்கே இட பற்றாக்குறை என்ற பிரச்சினை சிறைக் காவலர்களிடத்திலோ, பணியாளர்களிடத்திலோ இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறைகள் பராமரிப்பு நிதிக்காக 5 கோடி ரூபாய் என்றிருந்ததை 2025-2026 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், நம்முடைய சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையினுடைய மானியக் கோரிக்கையில் 10 கோடி ரூபாயாக உயர்த்தி, அறிவிப்பு தந்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். எனவே, இன்றைக்கு இருக்கிற விலைவாசி போன்றவற்றையெல்லாம் உணர்ந்து தான், 5 கோடி ரூபாயை 10 கோடி ரூபாயாக உயர்த்தி தந்திருக்கிறார்கள். எனவே, காவலர் வீட்டு வசதி கழகத்தின்மூலம் இன்றைக்கு எந்தெந்த இடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ ONE-BY-ONE ஆக அதற்கு முக்கியத்துவம் தந்து அந்தப் பணிகளை எடுக்க வேண்டுமென்று அரசு கேட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே சேலம் மத்திய சிறைச்சாலையில் இருக்கக்கூடிய அந்தக் கால்வாய் உடனடியாக தூர்வாரி, சுத்தம் செய்யப்பட வேண்டுமென்று சொன்னால், அது உடனடியாக பணிக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், 2021-2022 ஆம் ஆண்டில் ரூபாய் 49 ஆயிரம் மதிப்பில் அந்தக் கால்வாய் பழுதுபார்க்கப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலளித்தார்.

கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி

பகுதிநேர ரேஷன் கடையை முழு நேரக் கடையாக மாற்றுக!

சட்டப்பேரவையில் பெ.சு.தி. சரவணன் கோரிக்கை!

சென்னை, அக்.18- சட்டப்பேரவையில் கலசபாக்கம் தொகுதி உறுப்பினர் பெ.சு.தி. சரவணன் கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அளித்த பதிலும் வருமாறு:-

பெ.சு.தி. சரவணன்: கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பட்டியந்தல், ஆதமங்கலம்புதூர், அரியாரிமங்கலம் போன்ற பகுதிகளில் உள்ள பகுதி நேர நியாய விலைக் கடைகள் 500க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் இருந்தும், முழு நேரக் கடைகள் இயங்குவதற்குண்டான அனைத்து விதிமுறை களுக்குட்பட்டிருந்தாலும், அவையனைத்தும் பகுதி நேரக் கடைகளாகவே இயங்கிக்கொண்டிருக்கின்றன. அமைச்சர் அவற்றை முழு நேரக் கடைகளாக மாற்றித் தருவதற்கு முன் வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன்: ஏற்கெனவே குறிப்பிட்டவாறு 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமல் இருந்தால், அவை முழு நேரக் கடைகளாக மாற்றி அமைத்துத் தரப்படும். அந்தவகையில், உறுப்பினர் அவர்கள் தங்களது கோரிக்கையை என் கவனத்திற்குக் கொண்டுவந்தாலும் அல்லது மாவட்ட அளவில் அது குறித்து தெரிவித்தாலும், அந்தக் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

சேலம் மேற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர்

தங்கமுத்து மனைவி சரஸ்வதி மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சேலம், அக்.18- சேலம் மேற்கு மாவட்ட கழக அவைத் தலைவரும்,3 முறை முன்னாள் சங்ககிரி ஒன்றிய கழக செயலாளரும், 2முறை முன்னாள் சின்னகவுண்டனூர் ஊராட்சி மன்ற தலைவருமான,முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் பி. தங்கமுத்து அவர்களின் மனைவி டி.சரஸ்வதி அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2025) வியாழக்கிழமை இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். தகவலறிந்ததும் கழகத்தினர் அன்னாரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் ஒன்றியம், திருக்களாச்சேரியில் நடைப்பெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தின் சிறப்பு முகாமில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் கலந்து கொண்டு தொடங்கி வைத்து பொது மக்களிடம் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடி தீர்வு கண்டு பயனாளிகளிடம் வழங்கினார் நிகழ்ச்சியில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம். சித்திக், செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.அப்துல் மாலிக்,பொதுக்குழு உறுப்பினர் நத்தம் ஏ.வின்சென்ட்மற்றும் பலர் உள்ளனர்.